# ஊழியம்

Transcribed from a message spoken in November, 2012 in Chennai

By *R.S. Milton*

## உள்நோக்கம்

### தலைவனாக வேண்டும்

இந்த உலகத்தில் தூய்மையான சகோதரர்களைப் பார்ப்பது மிகவும் அரிது. தூய்மையென்றால் எந்த உள்நோக்கமோ, மறைவான நோக்கமோ இல்லாதிருப்பது. புகழ்வாய்ந்த பிரபலமான ஒரு தலைவனாக மாற வேண்டும் என்பது உள்நோக்கம் அல்லது மறைவான நோக்கம். இது ஓர் எடுத்துக்காட்டு. பலர் தன்னை ஒரு தலைவனாகக் கருத வேண்டும். மக்கள் தன்னை நோக்கிப் பார்க்க வேண்டும், தன்னிடம் வரவேண்டும், தன்னைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்நோக்கமாகும். கூட்டம் எவ்வளவு பெரிதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவர்கள் இன்று பெரிய தலைவர்களாகக் கருதப்படுகிறார்கள். 100, 200, 500, 1000, 5000, 10000 பேருக்குத் தலைவனாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலானவர்களிடம் இருக்கிறது. இது ஓர் உள்நோக்கம்.

### பிரபலமாக வேண்டும்

இரண்டாவது, அதிகமான visibilityயை அவர்கள் இந்த உலகத்தில் பெற விரும்புகிறார்கள். பெரிய பொதுக் கூட்டங்கள் நடத்துவது, பத்திரிகைகள் நடத்துவது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், இணையதளங்கள்-இப்படிப் பல. இவைகளைத் தூய்மையான எண்ணத்தோடும் பயன்படுத்தலாம். ஆனால், visibilityயைப் பெறுவதற்காகவும் பயன்படுத்தலாம். Visibilityயைப் பெறுவதற்காகப் பயன்படுத்துவது உள்நோக்கம்.

### வசதியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்

அடுத்து, இந்த உலகத்தில் பொருள் வசதியோடு வாழ விரும்புவது; ஒரு வசதியான வீடு வேண்டும், ஒரு வசதியான போக்குவரத்து வேண்டும், ஊழியத்தின்மூலம் இவைகளைப் பெற விரும்புவது. இதுவும் உள்நோக்கமே. இதை விரும்பாதவர்கள் எத்தனைபேர்?

நான் ஒரு மிகச் சிறிய பட்டியலைத் தயாரிக்க முயற்சி செய்கிறேன். எடுத்துக்காட்டாக, வெளிநாட்டுப் பயணம். முதலாவது பலர் தங்களை வந்து பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது visibility. இரண்டாவது வாழ்க்கையில் வசதியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒரு வெளிநாட்டுப் பயணம் வேண்டும். இவைகளெல்லாம் இல்லாமல் இன்றைக்கு இந்த உலகத்தில் தேவனை சேவிக்கிற மக்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு.

### எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்

எதுவும் இல்லையென்றாலும் எண்ணிக்கை என்று வரும்போது நாம் உள்நோக்கம் உடையவர்களாக அல்லது தூய்மையற்றவர்களாக மாறி விடுகிறோம். தேவனுடைய மக்கள் எத்தனை பேருக்குப் பயனுள்ளவர்களாக இருக்க முடியுமோ அத்தனை பேருக்குப் பயனுள்ளவர்களாக இருக்க நாம் ஆசைப்பட வேண்டும். ஆனால், இன்னொரு பக்கம், அந்த எண்ணிக்கையே உள்நோக்கமாக மாறிவிடலாம். பார்வைக்கு இரண்டும் ஒன்றுபோல் தோன்றலாம். ஆனால், முதல் வகை வேறு. இரண்டாவது வகை வேறு. பலருக்குப் பயனுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது வேறு. ஆனால், எண்ணிக்கையை நோக்கமாகக் கொண்டிருப்பது வேறு.

இன்றைக்கு 'சபை'களில் மக்கள் கையாளுகிற பல காரியங்களைப் பார்க்கும்போது அவைகளை நம்மால் கையாள முடியாது. எடுத்துக்காட்டாக 5 இலட்சம் ரூபாய் கடனில் இருக்கிற ஒரு மனிதனை விடுவிக்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அப்படி ஒருவனை விடுவித்த அனுபவம் எனக்கு இல்லை. ஒருவேளை அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒருவன் இருந்தால் அவனை விடுவிக்க முடியுமா? அவனை விடுவிக்கக்கூடிய வலிமை, உரம் எனக்கு இருக்குமா என்பதும் கேள்விக்குறிதான் அல்லது ஒருவனுக்கு ஒரு வியாதி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அல்லது ஒரு தம்பதியர் திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தை இல்லாமல் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்படிப்பட்ட நபர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். "நீங்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுங்கள். தேவன் நிச்சயமாக உங்களுக்கு இதைச் செய்வார்," என்று சொல்லக்கூடிய

தைரியம் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது? “சொல்லிப் பார்ப்போம். வந்தால் இலாபம், வரா விட்டால் போகிறது,” என்பது போன்ற காரியம் அல்ல இது. “உண்மையாகவே தேவன் இதை உங் களுக்குச் செய்வார்,” என்று சொல்லி விடுதலை வாங்கிக்கொடுத்த அனுபவம் எனக்கு இல்லை. தேவனுடைய சபை அல்லது வீடு அல்லது குடும்பம் என்றால் இப்படிப்பட்ட உரம், திடம், வலிமை அங்கு வேண்டும். நம்மில் பலருக்கு அது இல்லை. இப்படிப்பட்டவைகளை நான் பார்த்திருக்கிறேன். இது மனிதர்களுக்கு அஞ்சாத தன்மை.

ஒரு பக்கம் நாம் பலருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறோம், பிரயாசப்படுகிறோம், முயற்சிசெய் கிறோம். இது நல்லது. ஆனால், இன்னொரு பக்கம், அவர்களுக்குப் பிரியமாயிருக்க முயற்சிசெய்வ தால் நாம் அவர்களுக்கு அடிமைகளாகவோ அல்லது அவர்களுடைய பிரியத்தை இழந்து விடுவோம் என்பதால் அவர்களுக்கு அஞ்சியோ வாழக்கூடாது. எவ்வளவு பெரிய மனிதாக இருந்தாலும் சரி.

## ஊழியத்தின் தேவை

அப்படியானால் தேவன் இன்னும் போதுமான உறுதிப்பாட்டையும், பலத்தையும், வலிமையையும் ஏன் நமக்குத் தரவில்லை? ஊழியம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் வந்தவுடன் ஊழியத்தைக் குறித்த சில காரியங்களை நாம் ஆயத்தம்பண்ணுகிறோம். ஓர் இடத்தை வாடகைக்குப் பிடிப்பது இன்று இது சர்வ சாதாரணமாக நடக்கிறது. இது புறம்பான ஒரு காரியம். இதைத் தாண்டி தேவன் உள் ளாக ஒரு உரத்தையும், புறம்பாக ஒரு உறுதிப்பாடடையும் தரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும்.

ஆகவே, நாம் இன்னும் ஒரு சிலராக இருப்பதைக் குறித்து அதிகக் கவலைப்பட வேண்டிய அவ சியம் இல்லை. சொல்லப்போனால் பலரை, பல பிள்ளைகளைக் கையாளுவதற்குத் தேவையான நபர்களாக நாம் மாறியிருக்கிறோமா என்று நாம் தேவனிடம் கேட்க வேண்டும். நன்றாகப் பேசுவது அல்லது பாடுவது ஒரு திறமை. இவைகளை வைத்து நாம் ஒரு கூட்டத்தைக் கூட்டிச் சேர்ப்பது வேறு காரியம். தேவனுடைய சபை அல்லது தேவனுடைய குடும்பம் என்பது முற்றிலும் வித்தியாச மானது. அதற்குரிய குணம், வலிமை, உரம் உள்ளாக இருக்க வேண்டும். உண்மையிலே, “அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்,” என்று திருவெளிப்பாடு 3:12இல் சொல்வது போல் அல்லது அந்தச் சபைகளின் தூதர்களைக் குறித்துச் சொல்லும்போது, “அவர்கள் என் கை களிலுள்ள நட்சத்திரங்கள்” என்று சொல்லும் அளவுக்கு தேவனுடைய வேலைக்காரர்கள் தேவ னுடைய குடும்பமாகிய மிகப்பெரிய கூட்டத்திலே அவருடைய பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். அவர்கள் வேறு எங்கோ இருந்து வரப்போவதில்லை. இங்கிருந்துதான் வர வேண்டும். நம்மிடையே யிருந்துதான் வரவேண்டும். இது முதலாவது காரியம். நம் எண்ணிக்கை குறைவாக இருப்பதைப் பற்றி நான் அதிகமாக வருத்தப்படுவதில்லை. ஏனென்றால், அதற்குரிய பாத்திரமாக தேவன் பலரை உருவாக்கும்போது..ஒரு பாத்திரத்தை உருவாக்கியபின் அதைப் பயன்படுத்தாமல் தேவன் வீணாக்க மாட்டார். ஏனென்றால், அவர் பயன்படுத்தத்தக்க பாத்திரங்கள் இந்தப் பூமியில் மிகக் குறைவு. தேவன் நம்மை அப்படிப்பட்ட பாத்திரங்களாக உருவாக்கிவிட்டு அதை ஒருநாளும் பயன்படுத்தாமல் விடமாட்டார். அதுபோல நம்மைவிடச் சிறந்த பாத்திரங்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் மிகத் தாழ்மையான நிலையை எடுத்துக்கொள்ளும்போது நம் நிலையைக் குறித்து நாம் ஒன்றும் கிலேசம் அடையத் தேவையில்லை.

## ஆவிக்குரிய கல்வி

இரண்டாவது, ஒரு புதிய நபர் நம்மிடையே வரும்போது அவரை நாம் எப்படி வரவேற்பது, எப்படி அவருடன் நடந்துகொள்வது என்பதைப்பற்றிய ஆவிக்குரிய கல்வி நமக்கு அவசியம். ஒரு புதிய நபர் நம்மிடையே வரும்போது அவரைப்பற்றிய முழு விவரத்தையும் நாம் தெரிந்துகொள்ள வேண் டிய அவசியம் இல்லை. “நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? எப்போது, எப்படி? எங்கிருந்து வருகிறீர்கள்? நீங்கள் அபிஷேகம் பெற்றிருக்கிறீர்களா? எப்போது? எப்படி?” இப்படி கேள்விகளுக்கு மேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டு சென்றால் அவர் திக்குமுக்காடிப்போவார். அதுபோல அவரை விழுந்து விழுந்து கவனிக்கவேண்டிய அவசியமும் இல்லை. அதற்காக “வந்தால் வரு கிறான், வராவிட்டால் போகிறான்” என்று கண்டுகொள்ளாமலும் இருக்க வேண்டாம். இதைப்பற்றிய கல்வியை நாம் தேவனிடம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவேளை நாம் புதிதாக வருபவரிடம், “பிரதர், இந்த வாரம் நான் உங்கள் வீட்டுக்கு வரட்டுமா? அல்லது நீங்கள் என் வீட்டுக்கு வருகிறீர் களா?” என்று கேட்கலாம். பாஸ்டராக இருந்தால், “உங்க வீட்டுக்கு வரலாமா,” என்று கேட்பார். பெரிய பாஸ்டர் என்றால் அந்தக் கேள்வியெல்லாம் கேட்க மாட்டார். “இந்த வாரம் உங்கள் வீட் டுக்கு வருகிறேன்,” என்று சொல்லிவிடுவார் அல்லது “நீங்கள் என் வீட்டுக்கு வருகிறீர்கள்,” என்று

சொல்லிவிடலாம். நம்மிடையே வருபவர்கள் அப்படிப்பட்ட பதிலைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டாம். நாமும் அவர்களுடன் இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஒருவர் கூட்டத்துக்கு வந்தவுடன் அங்கு ஒருவர் பாஸ்டரைப்போல் அல்லது ஒரு தலைவனைபோல் தென்படுகிறார் என்று வைத்துக்கொள்வோம். ஒரு தலைவனை எப்படி இனங்கண்டுகொள்வது? கூட்டம் முடிந்ததும் யாரிடம் போய் எல்லாரும் அடிக்கடி பேசுகிறார்களோ அவரை நாம் தலைவர் என்று அறிந்துகொள்ளலாம் அல்லது கூட்டத்தின்போது யார் அதிகமாகப் பேசுகிறாரோ அவர் தலைவர் என்று தெரிந்துகொள்ளலாம்.

சரி, புதிதாக வருபவர்கள் பலதரப்பட்ட மக்களாக இருக்கலாம். அவர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் தேவனிடம் ஒரு கல்வியைப் பெற வேண்டும். அவர்களும் நம்மை நியாயந்தீர்ப்பார்கள். நியாயந்தீர்ப்பார்கள் என்றால் சீர்தூக்கிப்பார்ப்பார்கள். நாம் தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டும். அவர்கள் நம்முடன் இரண்டு மணிநேரம் செலவிடுகிறார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு நம்முடைய பண்புகளும், குணமும் ஒரு ஆறுதலைத் தருமானால் அவர்கள் மீண்டும் நம்மிடம் வருவார்கள். நம்முடைய வீடுகளுக்கும் நாம் அவர்களை வரவேற்கலாம். “நேரம் இருந்தால் வாருங்கள்” என்று சொல்லலாம். அவர்கள் வரட்டும். நாம் கூப்பிடலாம். எல்லாரும் அவர்களைக் கூப்பிடலாம். பொதுவாக நம் குணம் அவ்வளவு உயர்வானதல்ல. கூப்பிடும்போது, “வருகிறேன் அல்லது வரமாட்டேன்”, என்று தெளிவாகச் சொல்லமாட்டார்கள். தேவனுடைய மக்களிடையே நல்ல குணமுள்ளவர்கள் அரிது. “இந்த வாரம் என்னால் வரமுடியாது. ஆனால், ஒருநாள் வருவேன்,” என்று சொல்லலாம்.

## எல்லாருக்கும் எல்லாமானேன்

மிக முக்கியமான காரியம் என்னவென்றால் நம் மதப்பழக்கங்களால் நாம் அவர்களைத் தூரமாக்கி விடக்கூடாது. 1 கொரிந்தியர் 9இல் பவுல் இப்படிச் சொல்லுகிறார்: நான் ஒருவனுக்கும் அடிமைப் படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன். பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.”

இதற்கு அர்த்தம் ஊரின் அடிப்படையில், குலத்தின் அடிப்படையில், இனத்தில் அடிப்படையில், படிப்பின் அடிப்படையில், ஜாதியின் அடிப்படையில், தொழிலின் அடிப்படையில் அவர்களை ஆதாயம்பண்ணுவதல்ல. “நீங்கள் அந்தக் கல்லூரியிலா படித்தீர்கள்? நானும் அந்தக் கல்லூரியில்தான் படித்தேன்.” இப்படிப் பயன்படுத்தலாமா? தவறு. “நீங்கள் அபிஷேகம் பெற்றிருக்கிறீர்களா இல்லையா?” இது கேள்வி. இது தேவையா? அவர்கள் அபிஷேகம் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்று நாளடைவில் தெரிந்துவிடும். இதன் பொருள் என்னவென்றால், அவர்களுக்கு என்ன தேவை இருக்கிறது என்பதை இனங்காண வேண்டும். பிறகு அந்தத் தேவையை நாம் எப்படி பூர்த்திசெய்வது என்று பார்க்க வேண்டும்.

## தேவ மக்களின் நிலையை அறிந்துகொள்ளுதல்

அப்போஸ்தலர் நடபடிகளில் சீமோன் என்ற மந்திரவாதி இப்படிக் கேட்டான். “நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்.” இது கெட்ட எண்ணம். பணம் கொடுத்தாவது வரத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். இதுபோல மக்களுடைய தேவையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அப்போது அவர்கள் சொல்வார்கள், “எனக்கு இப்படிப்பட்ட ஒரு தேவை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை இருக்கிறது,” என்று ஒருவேளை தெளிவான வார்த்தைகளில் சொல்லாமல் போகலாம். ஆனால் சொல்வார்கள். அதன்பின் நாம் அங்கு நுழைய வேண்டும். அவர்களுடைய தேவை இன்னதென்று தெரிந்துகொள்ளாமல் நாம் ஏதாவது செய்தால் அது பெரும்பாலும் வீணாகிவிடும். அப்படிச் செய்யும் ஊழியத்தை அவர்கள் பாராட்டமாட்டார்கள். அது விழலுக்கிறைத்த நீராகிவிடும்.

அங்கு, அதில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா என்பது கேள்விக்குறி. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் ஒரு தாகத்தை, கவனத்தை, வார்த்தையை ஏற்படுத்த வேண்டும்.

எல்லாருக்கும் திராட்சைரசத்தையும், அப்பத்தையும் கொடுத்தால் அதைப் பாராட்டுவார்களா? பாராட்ட மாட்டார்கள். மாறாக, போர்க்களத்தில் சண்டைபோட்டு தவிப்போடு வருகிற ஒருவனுக்கு அப்பமும் திராட்சைரசமும் கொடுத்தால் அவன் அதைப் பாராட்டுவான். "இந்த வனாந்தரத்தில் என்ன கிடைக் குமோ என்று தவித்தேன். இந்தக் கடனிலிருந்து எப்படி விடுபடுவேன் என்று நினைத்தேன். இந்த நோயிலிருந்து எப்படிக் குணமாவேன் என்று நினைத்தேன். இந்தக் குடும்பச் சிக்கலிலிருந்து எப்படி சமாதானமடைவேன் என்று நினைத்தேன். தேவன் விடுவித்தார். தேவன் மாற்றினார். தேவன் தந்தார். தேவன் செய்தார்," என்று சொல்ல வேண்டும். மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக நாம் எதை யாவது செய்தால் அது காலப்போக்கில் அவர்களுக்கோ அல்லது தேவனுக்கோ நன்மை பயக்கும் என்று சொல்ல முடியாது. இது இரண்டாவது. இது நம்மிடையே புதிதாக வருகிற மக்களுக்கு, பிரதானமாக முதலாவது அவர்களிடம் என்ன குறைவுபடுகிறது என்று நாம் காண்கிறோமோ அந்தக் குறையை அவர்கள் இனங்கண்டு கொள்வதற்கு நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அல்லது அவர்கள் ஏற்கெனவே தங்களிடம் இருக்கும் குறையை இனங்கண்டு கொண்டிருக் கிறார்கள் என்றால் அதைப் பூர்த்திசெய்ய நாம் உதவ வேண்டும். தேவன் அதைப் பூர்த்திசெய்வார். தேவனுக்குமுன்பாக அவர்களுடைய வாழ்க்கை சரி செய்யப்படும்.

தேவன் பூர்த்திசெய்வார் என்றால் எனக்கு 2 இலட்சம் கடன் இருக்கிறதென்றால் நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. சரி, எனக்கு 2 இலட்சம் கடன் இருக்கிறதென்றால் நான் என்ன செய்ய வேண்டும். என்னிடம் இருக்கும் நிலத்தை விற்று கடனைத் தீர்த்துவிட வேண்டும். தேவனுக்கு முன்பாகச் சரிசெய்துகொள்வதென்றால் ஜெபம்பண்ணுவது மட்டும் இல்லை. அது எல் லாரும்தான் பண்ணுவார்கள். இது தேவனுடைய ஊழியக்காரர்களை மந்திரம்போல் பயன்படுத்துவ தாகும். தான் ஜெபம் பண்ணினால் தேவன் கேட்கமாட்டார் என்று அவர்களுக்குத் தெரியும். ஏனென் றால், அவர்கள் பண்ணுவது அட்டூழியம். ஆனால், தேவனுடைய ஊழியக்காரர் பண்ணினால் ஒருவேளை கேட்கப்படலாம்.

உன்னுடைய நிலைமை என்ன? "உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள். உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு" (நீதி. 27:23). இந்த ஆடு ஏன் முட்புதரில் சிக்கிக்கொண்டது? இது ஒருநாளில் நடைபெற்றதில்லை. ஒரு வழிமுறையில் சென்று கடைசியில் இந்தக் கட்டத்திற்கு வந் திருக்கிறது. ஒரு மருத்துவர் ஒரு நோயாளியின் நோயைக் கண்டறிவதுபோல், நாம் அவர்களுடைய உள்ளான நிலைமையைப் பார்க்க வேண்டும். பகுத்துணர்வதற்கு நாம் பிரயாசப்பட வேண்டும். தேவனுக்கு முன்பாக, "கடனில் இருக்கிறீர்களா? எவ்வளவு? 10000 ரூபாயா? இந்தா பத்தாயிரம் பிடி யுங்கள்," என்பதல்ல. தேவனுக்கு முன்பாக அவனுடைய ஆவிக்குரிய நிலையை அல்லது தேவ னோடு அவனுக்குள்ள உறவின் நிலையை நாம் பகுத்துணராமல் அவனுக்கு நாம் கொடுக்கிற 10000 ரூபாய் அவனைத் தேவனோடு உள்ள உறவில் வலுப்படுத்தாது. அது அவனுக்கு நட்டம். தேவன் தான் இதைச் செய்ய முடியும் என்று நாம் அவனை உணரச்செய்ய வேண்டும். "உன்னிடம் என்ன இருக்கிறது? ஒரு மோட்டார் சைக்கிள். அதை விற்றால் எவ்வளவு கிடைக்கும்? 30000 ரூபாய். எவ் வளவுக்கு வாங்கினாய்? 40000 ரூபாய். எவ்வளவு கடன்? 10000 ரூபாய். விற்று கடனைத் தீர்த்து விடு."

அவன் ஆலோசனையைக் கேட்டு விற்று விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இப்போது என்ன செய்யலாம்? ஊழியம் செய்யலாம். சிலுவையின் வழியாகச் சென்று அவனுக்கு ஊழியம் செய்ய லாம். இது கடினமான ஒன்று. ஒன்று ஜெபம் பண்ணலாம். அப்படிச் சொல்லியே பல வருடங் களைக் கடத்திவிடலாம். இது இரண்டாவது, தேவை என்னவென்று தெரியாமல் பேசிக்கொண்டே போகிறது அல்லது செய்துகொண்டே போகிறது. இது நலம் பயக்காது. "நீங்கள் மனந்திரும்பு வீர்களா? ஞானஸ்நானம் பெறுவீர்களா?" இதற்கெல்லாம் நடத்த வேண்டும். மெல்ல. அவர்களுடைய தேவையை உணரச்செய்தபின் நடத்த வேண்டும். இதை இரண்டாவது குறிப்பில் சேர்த்துக்கொள்ள லாம்.

ரோமன் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த ஒருவர் வருகிறார். அப்போது 'வாழ்வை அளிக்கும் வல்லவா' பாடல் பாடலாம். சில சிஎஸ்ஐ பாடல்கள், சில பெந்தெகொஸ்தே பாடல்கள் வைத்துக் கொள்வது நல்லது. இது மாய்மாலம் அல்ல. பவுல் யூதர்களிடையே போகும்போது வேதத்திலிருந்து எடுத்துக்காட்டுகிறார். அத்தேனே பட்டணத்திற்குப் போகும்போது, "உங்கள் புலவர்களிலும் சிலர் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார். "மற்ற இடங்களில் பலர் இரட்சிக்கப்பட்

டார்கள். ஆனால், அத்தேனே பட்டணத்தில் ஒரே ஒருவன்தான் இரட்சிக்கப்பட்டான்," என்று மக்கள் சொல்வார்கள். இதை நான் நம்பவில்லை. இது நல்ல உதாரணம். "நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தியே, சுற்றிவந்து முணுமுணுவென்று சொல்லும் மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையிலே," என்று உங்கள் புலவர்களிலும் ஒருவன் சொல்லியிருக் கிறானே என்று சொல்லும்போது அது நம் இருதயத்தில் ஓர் அசைவை உண்டாக்க வேண்டும். ஓ! இப்படி நம் புலவர்களும் சொல்லியிருக்கிறார்களா? அது நம் இருதயத்தைக் கொஞ்சம் கரையப் பண்ணும். அப்படியானால் சிலை என்பது ஒரு பொருட்டல்ல. இதற்குப்பதிலாக நேரே போய் "விக்கிரகாராதனை செய்யாதிருப்பாயாக" என்று சொன்னால் அவர்களுடைய இருதயம் கரையாது. இது மாய்மாலம் அல்ல. குழந்தைக்கு குழந்தையின் மொழியில்தான் பேச வேண்டும். ரோமன் கத்தோலிக்கனிடம் பேசும்போது அவர்களுடைய வேதாகமத்தையே பயன்படுத்தலாம். நாம் அதற்கு எதிரானவர்கள் இல்லையே. நாம் பயன்படுத்துகிற மொழிபெயர்ப்பின் பெயர் எத்தனைபேருக்குத் தெரியும். இந்த மொழிபெயர்ப்பைத்தவிர இன்னும் பல தமிழ் மொழிபெயர்ப்பு இருக்கிறது என்று நம் மக்களுக்குத் தெரியுமா? தெரியாது. எடுத்த எடுப்பில் நம் வித்தியாசம் என்னவென்று காட்டு வதில் குறியாக இருந்தால் வாசலிலேயே நாம் விருந்தினரை இழந்துவிடுவோம்.

ஒரு சிபிஎம்காரர் வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். வந்தவுடன் "உங்கள் பாஸ்டர் கல்யாணம் பண்ணுவதில்லை. மருந்து சாப்பிடக்கூடாது என்கிறீர்கள். அந்நிய பாஷை பேசி குதிக்கிறீர்கள்" என்று அவர்களுடைய இன்னா நாற்பதைப் பாட ஆரம்பித்தால் அவர்களுடைய இனியவை நாற் பதைக் கேட்பதற்கு அவன் இருக்க மாட்டான். அது 'இன்னா' என்பதை அறிய அவனை நடத்துவது நம்முடைய ஆவிக்குரிய பலத்தைப் பொறுத்தது. நாம் ஆவிக்குரிய வகையில் பலமாக இருந்தால், அவன் சொல்வான், "ஆம். நான் செய்கிறது தவறு அல்லது நான் செய்கிறது தேவனுக்குப் பிரிய மானதல்ல." தேவன் இதைத் தேடவில்லை என்ற உணர்வு நம்மைத் தொடும்போது அவனுக்கு வரும். தர்க்கம் பண்ணவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்," என்று கேட்க வேண்டும். நாம் குத்திக் குத்தி ஒரு காரியத்தை உருவாக்குவதற்கும், பரிசுத்த ஆவியானவர் ஒரு காரியத்தை உணர்த்துவதற்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது.

## தேவனோடு சேர்ந்து உழைக்க வேண்டும்

தேவனிடத்தில் இந்தக் காரியத்தை நாம் சரிபார்க்க வேண்டும். "தேவனே, நீர் வேலைசெய்கிறீரா?" ஒருவன் இரட்சிக்கப்படுவது என்பது ஓர் அற்புதம். அப்படியானால் நாம் தேவனிடத்தில் கேட்க வேண்டும். "ஆண்டவரே, நீர் அந்த மனிதனிடத்தில் வேலை செய்கிறீரா? எந்தப் பகுதியில் வேலை செய்கிறீர்," தேவன் அந்த மனிதனுடைய ஒரு குறிப்பிட்ட பகுதியில் வேலை செய்துகொண்டிருக்கும் போது நாம் இன்னொரு பகுதியில் வேலை செய்யக்கூடாது. இது தேவனோடு ஒத்துழைப்பது இல்லை. இது இரண்டாவது.

முதலாவது என்ன சொன்னேன்? நாம் ஊழியம் செய்வதற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை. நம்மை விட இன்னும் உரமும் வலிமையும் உடைய சகோதரர்கள் இன்னும் ஆயத்தமாகவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்க நாம் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம் என்று எண்ண வேண்டாம். நாம் புதியவர்களை எப்படிக் கவனிக்க வேண்டும் என்பதைக் குறித்து தேவனிடம் கற் றுக்கொள்ள வேண்டும் அல்லது முக்கியமான தேவை என்னவென்பதை அறிந்து அதன்படி சேவிக்க வேண்டும். இல்லையென்றால் நம் வாழ்க்கையில் இதுவரை பல காரியங்களை வீணாக்கியதுபோல் இன்னும் வீணாக்கிக்கொண்டிருப்போம். இந்த இரண்டு காரியங்களை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினேன்.

## உறவைப் பராமரித்தல்

மூன்றாவது இன்னொரு காரியம். உறவு என்ற காரியம். இதைப்பற்றி நாம் அடிக்கடி பேசியிருக் கிறோம். ஓர் உறவைக் காப்பாற்றுவதற்கு நம்மால் ஆனதை நாம் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சட்டப்படி நாம் என்ன செய்ய வேண்டுமோ அதையும் தாண்டி, அதற்கு அப் பாற்பட்டு நாம் செய்ய வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டு ஆவி. "சட்டப்படி நான் இவ்வளவு செய் தால் போதும், என்னால் முடிந்த அளவுக்கு நான் செய்கிறேன்." எல்லாரும் அப்படித்தான் சொல் வோம். ஒருவேளை நிந்தை, அவமானம், இழப்பு, நட்டம், பாடு, வருத்தம், காயம் ஆகியவைகளின் வழியாகப் போகிற உறவைப் பாதுகாப்பதற்காக எடுக்கிற முயற்சிகள் தேவனுடைய ஆசீர்வாதத் தைக் கொண்டுவரும். இது மத்தேயு 5ஆம் அதிகாரம். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கிய வான்கள்".

ஓர் உறவைத் தொடங்குவதாக இருந்தாலும் சரி, அதைப் பேணுவதாக இருந்தாலும் சரி, எல்லா உறவுகளும் கனி கொடுக்கும் உறவுகளாக வளர்வதில்லை. சிலர் உறவு கொள்ளும்போது உள்நோக் கத்தோடு உறவுகொள்வார்கள். “இவர்களோடு உறவு கொள்வதால் நமக்கு என்ன ஆதாயம்?” என்ற நோக்கம் இருக்கும். “என்ன இலாபம்?” தேவனுடைய பிள்ளைகளும்கூட இந்த எண்ணத்தோடு பழகு வார்கள். தூய்மையான உள்ளத்தோடு இந்தப் பூமியில் உறவுகொள்ளும் தேவனுடைய மக்கள் மிகச் சிலரே. ஆனால், நாம் இதைக் கண்டுபிடித்துவிடலாம். ஒரு நாளில் அல்லது ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் நாம் கண்டுபிடித்துவிடலாம். ஆனாலும், நம்பிக்கை இழக்கக்கூடாது. ஏனென்றால் தூய்மையான உள்ளத்தோடு உறவுகொள்ளுகிற தேவனுடைய மக்கள் இன்னும் இருக்கிறார்கள் என் றும் அல்லது தூய்மையற்ற, உள்ளான நோக்கத்தோடு வந்தாலும் அவர்களைப் பரிசுத்த ஆவியான வர் சுத்திகரிப்பதற்கு வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு பழக வேண்டும்.

### செலவுபண்ணப்படுதல்

நாமெல்லாரும் ஒருநாள் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறு வோம் என்று நம்புவதற்கு என்ன இருக்கிறது? He is still working on me என்ற ஒரு பாடல் உண்டு. தேவன் இன்னும் நம்பிக்கையோடு நம்மில் வேலைசெய்து கொண்டிருக்கிறார். மக்கள் நம்மைச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு விட்டுவிடுங்கள். அவர்கள் தேவனையே தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள். தேவன் அதை அனுமதிக்கிறார். எனவே தேவனுடைய மக்கள் எல்லா ரையும் நாம் அவநம்பிக்கையோடு பார்க்கவேண்டிய தேவையில்லை. பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு பலவீனருக்கு பலவீனரைப்போல் ஆனேன். எனவே உறவுகளைத் தண்ணீர் ஊற்றி வளருங்கள். அது துளிர்க்கிற வாய்ப்பு இருக்கிறது. சில சமயம் மரம் ரொம்ப காய்ந்துபோய் இருக் கும். துளிர்க்க வாய்ப்பில்லை என்று கருதுவோம். அது ஒரு வேளை கோடைகாலமாக இருக்கலாம். கோடைகாலம் சென்றபின் துளிர்க்கிற வாய்ப்பு வரலாம். தோட்டக்காரன் சொல்கிறான். “இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்தில் கனியைத் தேடி வருகிறேன். ஒன்றையுங் காணவில்லை. இதை வெட்டிப்போடு. இது நிலத்தையும் கெடுக்கிறது.” இதற்கு அந்த வேலைக்காரன் சொன்ன பதில், “ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும். இதை நான் சுற்றிலுங் கொத்தி, எருப் போடு வேன்.” இதை நான் சரியான இட அமைப்பின்படி பயன்படுத்துகிறேனா என்று எனக்குத் தெரிய வில்லை.

உறவுகளை ஏற்படுத்துகிறவர் தேவன்தான். எனவே தேவன்தான் எல்லாவற்றுக்கும் பொறுப்பு என்று விட்டுவிடலாமா? பெற்றோர்கள்—பிள்ளைகள், கணவன்—மனைவி, இப்படிப் பல உறவுகள். தேவன் தான் உறவுகளுக்குப் பொறுப்பு என்பதால் மற்றவர்கள் நம்மைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்த விட்டுவிடலாமா? இல்லை. ஆண்டவராகிய இயேசுவின் சகோதரர்கள் சொல்லுகிறார்கள். “நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம் விட்டு யூதேயாவுக்குப் போம். பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையுஞ் செய்யமாட்டான். நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும்.” அவர் உடனே இந்த உறவுக்காக, “நான் எருசலேமுக்குப் போகிறேன்,” என்று போய்விடவில்லை. “இங்கே போய் உம் மைப் பெரிய ஆளாகக் காட்டும், அங்கு போய் உம்மைப் பெரிய ஆளாகக் காட்டும்,” என்று சொன்னபோது அவர் அப்படிச் செய்யவில்லை.

இந்நேரத்திற்கு நாம் ஒன்றை அறிந்திருக்க வேண்டும். மனிதர்களைப் பிரியப்படுத்துவதற்காக எதைச் செய்கிறோம்? உறவுகளைத் துளிர்க்கவைக்க, மலரவைக்கச் செய்வது எது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பகுத்துணர்கிற அந்த அறிவு இந்த நேரத்திற்கு நமக்கு வந்திருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லாசருவின் சகோதரிகள் அழைத்தவுடன் ஓடோடிப்போகவில்லை. ஆனால், போகாமலும் இருக்கவில்லை. எது தேவனுடைய மகிமையை இவர்களின் வாழ்க்கையில் அதிகமாகக் கொண்டுவருமோ அதை அவர் செய்தார். ஆனால், நல்ல வசனம் இருக்கிறது. “அப்படி யிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை” *(யோவான் 2:24, 25)*. இந்த ஊருக்குக் கூப்பிட்ட வுடன் அந்த ஊருக்கு ஓடுவது, இன்னொரு ஊருக்குக் கூப்பிட்டவுடன் அந்த ஊருக்கு ஓடுவது. உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவர் நடத்திப் போகச் சொன்னால் போங்கள். பிலிப்பை ஆவியானவர் கொண்டு செல்லவில்லையா? அதுபோல. வனாந்திரத்துக்குப் போகிற பாதை வழி யாகத் தேவன் நடத்தினார். நன்றி சொல்வதற்குக்கூட விட்டுவைக்கவில்லை. “உங்கள் முகவரி, தொலைபேசி எண், மின் அஞ்சல் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுப் போங்கள்,” என்று பிலிப்பு

கேட்கவில்லை. “பிரதர் எங்கு காணிக்கை அனுப்ப வேண்டும்? என்று எத்தியோப்பியா மந்திரி கேட்கவுமில்லை.

ஒரு மாதப் பத்திரிகையில் நான் வாசித்தேன். 5 அப்பங்களுக்கும் 2 மீன்களுக்கும் அடையாளமாக 500 ரூபாயும், 200 ரூபாயும் அனுப்பலாம் அல்லது 5000 ரூபாயும், 2000 ரூபாயும் அனுப்பலாம் என்று எழுதியிருந்தார்கள். ஆடிப்போய் விட்டேன். காரியத்தைச் செய்துமுடித்தபின் அப்படி அங்கு நின்று கொண்டிருக்கக்கூடாது. அவர்களுடைய நன்றியைப் பெறுவதற்காக. ஒரு மணி நேரம்தான் உறவு என்றால், முடிந்ததா? போய்க்கொண்டேயிருங்கள். வாழ்நாள் முழுவதும் எத்தியோப்பிய மந்திரியோடு பிலிப்புக்கு உறவு இல்லை. ஆனால், அவனுடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் இருந் திருக்கும். “நான் வந்து கொண்டிருந்தேன். அந்த மனிதன் வந்தார்...” உண்மையில் அந்த ஆளுடன் இன்னும் கொஞ்சம் நேரம் அதிகமாகச் செலவழித்திருந்தால் உறவு சேதமாகி இருக்கலாம். சிறியதோ பெரியதோ தேவன் நடத்தினால் பின்பற்றுங்கள்.